# சிறந்த ஊடகவியலுக்கான விருதுகள் 2025

## பிரிவுகள் மற்றும் அளவுகோல்கள் (அச்சு மற்றும் டிஜிட்டல் ஊடகங்கள்)

விண்ணப்பப் படிவத்தை நிரப்புவதற்கு முன், விண்ணப்பதாரர்கள் “பிரிவுகள் மற்றும் அளவுகோல்களை“ கவனமாக வாசிக்கவும். சரியான பிரிவு மற்றும் அளவுகோல்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்த உங்கள் பத்திரையாசிரியர் அல்லது பிரிவுத் தலைவரை அணுகவும். ஒவ்வொரு விண்ணப்பமும் பத்திரிகையாசிரியரால் அல்லது அவர் இல்லாதபோது, இலங்கை பத்திரையாசிரியர் சங்கத்தின் உறுப்பினரால் கையொப்பமிடப்பட வேண்டும். பிரிவுத் தலைவர்கள் மட்டுமே கையொப்பமிட்ட விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்பமொன்றுடன் ஐந்து ஆக்கங்கள் இணைக்கப்படலாம், மேலும் அவை ஒன்றாக கட்டுப்பட்ட தொகுப்பாக சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

## அச்சு ஊடக பிரிவுகள்

### ME– மெர்வின் டி சில்வா ஆண்டின் சிறந்த ஊடகவியலாளர் (ஒற்றை விருது)

இலங்கை பத்திரிகையாசிரியர் சங்கத்தின் ஸ்தாபகத் தலைவரும், புகழ்பெற்ற பத்திரிகையாசிரியரும் கட்டுரையாளரும் மற்றும் வெளிநாட்டுச் செய்தியாளருமான மெர்வின் டி சில்வாவின் நினைவாக, ஆண்டு முழுவதும் பத்திரிகைத் துறையில் நிலையாக சிறந்து விளங்கியதற்கும், பத்திரிகை நெறிமுறைகளைப் பின்பற்றியதற்கும் விருது வழங்கப்படுகிறது. முக்கிய தேசிய/சமூகப் பிரச்சினைகளைக் கையாண்ட, படைப்பாற்றலை வெளிப்படுத்திய, தாக்கத்தை ஏற்படுத்தும், நன்கு ஆய்வு செய்யப்பட்ட படைப்புகளை உருவாக்கிய இலங்கை பத்திரிகையாசிரியர்கள் மற்றும் ஊடகவியலாளர்களுக்கான விருது. உணர்திறன் மிக்க பிரச்சினைகளைக் கையாண்ட துணிச்சல் மேலதிக தகைமையாக கொள்ளப்படும்.

*உங்கள் ஆக்கத்தின் முக்கியத்துவத்தை விளக்கும் 250 சொற்களை கொண்ட அறிக்கையொன்றினையும் இணைக்கவும்.*

## IJ - ஆண்டின் சிறந்த புலனாய்வு ஊடகவியலாளர் (ஒற்றை விருது)

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த குற்றங்கள், ஊழல் அல்லது பெருநிறுவன தவறுகளை அம்பலப்படுத்தும் புலனாய்வு அறிக்கை அல்லது தொடருக்காக ஒரு தனிநபர் அல்லது குழுவிற்கு வழங்கப்படுகிறது. நடுவர்கள் ஆய்வின் ஆழம், துல்லியம், தொழில்முறை மற்றும் பொது/சமூக தாக்கத்தை மதிப்பிடுவார்கள். (ஏற்கனவே வெளியிடப்பட்ட செய்திக் கட்டுரைகளின்) பின்தொடர்தல்கள் தாக்கத்தை ஏற்படுத்தினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

*குழு விண்ணப்பங்களுக்கு 250 சொற்களை கொண்ட பத்திரிகையாசிரியரின் குறிப்பு அவசியமாகும்.*

## SC – ஆண்டின் சிறந்த விருது (ஒற்றை விருது)

தேசிய அளவில் தாக்கத்தை ஏற்படுத்தும் ஒரு பாரிய பிரத்யேக செய்தியை வெளியிட்ட ஊடகவியலாளர் அல்லது குழுவிற்கு வழங்கப்படும். விண்ணப்பதாரரின் ஊடக நிறுவனத்தினால் முதலில் வெளியிடப்பட்ட அசல் படைப்பாக இருக்க வேண்டும். ***விண்ணப்பதாரரின் கட்டுரை முதலில் பத்திரிகையில் பிரத்தியேகமாக வெளியிடப்பட்டது என்பதனை உறுதிப்படுத்திய*** *250 சொற்களை கொண்ட பத்திரிகையாசிரியரின் குறிப்பு அவசியமாகும்.*

## DP – டென்சில் பீரிஸ் ஆண்டின் சிறந்த இளம் ஊடகவியலாளர் (ஒற்றை விருது)

***இலங்கையின் மிகச்சிறந்த பத்திரிகையாசிரியர்களில் ஒருவரும், சர்வதேச அளவில் மதிக்கப்படுபவருமான டென்சில் பீரிஸை கௌரவிக்கும் வகையில் இவ் விருது வழங்கப்படுகிறது.***

நியாயமான மற்றும் துல்லியமான அறிக்கையிடல் மற்றும் நிலைத்தன்மை மூலம் விதிவிலக்கான திறனைக் காட்டும் 26 வயதுக்குட்பட்ட ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்படுகிறது. கேள்வி பதில் நேர்காணல்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. வெற்றியாளருக்கு MASCOM ஊடகவியல்

கல்லூரியில் (இந்தியா) கற்பதற்கான உதவித்தொகை வழங்கப்படும். சிறந்த ஆங்கிலப் புலமை அவசியம்.

## BH – சிறந்த சுகாதாரப் பராமரிப்பு மற்றும் மருத்துவ அறிக்கையாளர் (ஒரு மொழிப் பிரிவுக்கு ஒரு விருது)

உடல்நலம், மருத்துவ பராமரிப்பு, சிகிச்சைகள் மற்றும் நோய் தடுப்பு குறித்த நன்கு ஆய்வு செய்யப்பட்ட கதைகளை தொடர்ச்சியாக வெளியிடும் ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்படுகிறது. விண்ணப்பங்கள் துண்டுப்பிரசுரங்கள் அல்லது ஊடக வெளியீடுகள் அல்லாமல் மருத்துவப் பிரச்சினைகளை தெளிவான, எளிமையான மொழியில் விளக்க வேண்டும். மருத்துவர்களுடனான நேர்காணல்கள் விளம்பரமாக அல்லாமல் தகவல் அளிப்பதாக இருக்க வேண்டும்.

## ER – ஆண்டின் சூழலியல் அறிக்கையாளர் (ஒரு மொழிக்கு ஒரு விருது)

சுற்றுச்சூழல் பிரச்சினைகள், பாதுகாப்பு நடவடிக்கைகள் அல்லது சுற்றுச்சூழல் தவறாக பயன்படுத்துவதை அம்பலப்படுத்துதல் ஆகியவற்றை முன்னிலைப்படுத்தும் பணிக்காக ஊடகவியலாளர் ஒருவருக்கு அல்லது குழுவிற்கு வழங்கப்படுகிறது. நடுவர்கள் தாக்கத்தை ஏற்படுத்தும் புலன்விசாரணைகள், பிரச்சாரங்கள் அல்லது தொடர்களை - பொது நடவடிக்கைக்கு வழிவகுத்த ஒரு முறையை மட்டுமே கூறப்பட்ட கதைகளுடன் - பரிசீலிப்பார்கள். விண்ணப்பங்கள் நன்கு ஆய்வு செய்யப்பட்டு, அறிவியல் பூர்வ அடிப்படையை கொண்டதாகவும், சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த பொது விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகவும் இருக்க வேண்டும்.

## SJ- ஆண்டின் சிறந்த விளையாட்டு ஊடகவியலாளர் (ஒரு மொழிக்கு ஒரு விருது)

புலனாய்வு அறிக்கைகள், சிறந்த அல்லது நுண்ணறிவுள்ள நேர்காணல்கள் மூலம் விளையாட்டு செய்திகளுக்கு பெறுமதி சேர்க்கும் ஒரு ஊடகவியலாளருக்கு வழங்கப்படுகிறது. விண்ணப்பங்கள் ஒன்று அல்லது பல விளையாட்டுகளை உள்ளடக்கியிருக்கலாம். அத்துடன்

அறிக்கையிடலின் விளைவாக அதிகாரிகளால் எடுக்கப்பட்ட நடவடிக்கை உட்பட தெளிவான தாக்கத்தைக் காட்ட வேண்டும்.

### BD - சிறப்பாக வடிவமைக்கப்பட்ட பத்திரிகை (ஒற்றை விருது)

தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய வலுவான நெறிமுறை உள்ளடக்கம், வாசகர்களால் இலகுவாக வாசிக்ககூடிய வடிவமைப்பினை இணைக்கும் பத்திரிகைகளுக்காக ஒரு தனிநபர் அல்லது குழுவிற்கு வழங்கப்படுகிறது. நடுவர்கள் தளவமைப்பு, காட்சி சமநிலை, நிறப் பயன்பாடு, வாசிப்புத்திறன் மற்றும் ஒட்டுமொத்த தோற்றம் போன்றவற்றினை மதிப்பிடுவார்கள். விண்ணப்பங்கள் முழு பத்திரிகை மற்றும் தொடர்புடைய பிரிவுகளைக் கொண்டிருக்க வேண்டும்.

### BF - ஆண்டின் சிறந்த வணிக மற்றும் நிதியியல் ஊடகவியலாளர் (ஒரு மொழிக்கு ஒரு விருது)

நிதி மற்றும் பொருளாதாரம் குறித்த பொதுமக்களின் புரிதலை மேம்படுத்தும் தாக்கத்தை ஏற்படுத்தும், நன்கு ஆய்வு செய்யப்பட்ட வணிகக் கதைகளைத் தொடர்ச்சியாக வழங்கும் ஒரு ஊடகவியலாளருக்கு வழங்கப்படுகிறது. செய்திப் பெறுமதி, நடைமுறை வழக்குப் பகுப்பாய்வு, தெளிவு, அசல் தன்மை மற்றும் ஊடக நெறிமுறையை பின்பற்றுதல் ஆகியவற்றை நடுவர்கள் மதிப்பிடுவார்கள். கேள்வி பதில் வடிவங்களில் வெளியிடப்படும் ஊடக வெளியீடுகள் அல்லது நேர்காணல்கள் பரிசீலிக்கப்படாது.

### CY - ஆண்டின் சிறந்த கேலிச்சித்திர ஓவியருக்கான (ஒற்றை விருது)

பொதுமக்களின் உணர்வை திறம்படப் பிரதிபலித்து தேசியப் பிரச்சினைகள் குறித்து கருத்து தெரிவித்த கேலி சித்திரங்கள் அல்லது கிராபிக்ஸ் கலைஞருக்கு இவ் விருது வழங்கப்படுகிறது. மொழியைக் கடந்து, பொதுமக்களுடன் எதிரொலிக்கும், வலுவான கலை மற்றும் கேலித் திறன்களைப் பிரதிபலிக்கும் படைப்புகளை நடுவர்கள் மதிப்பார்கள்.

### PJ - ஆண்டின் சிறந்த புகைப்பட ஊடகவியலாளர் (ஒற்றை விருது)

தெளிவு, தொழில்நுட்பத்திறன் மற்றும் வலுவான காட்சி கதைசொல்லலுடன் தாக்கத்தை ஏற்படுத்தும் செய்தி அல்லது விபரணங்களை தொடர்ச்சியாக படம்பிடித்த அல்லது படங்களை சிறப்புடன் வெளியிடும் புகைப்பட ஊடகவியலாளருக்கு வழங்கப்படுகிறது. நடுவர்கள் பல்துறைத்திறன், கலவை மற்றும் மனநிலையை வெளிப்படுத்தும் திறனை மதிப்பிடுவார்கள். ஒவ்வொரு புகைப்படமும் உண்மையான, வெட்டப்படாத, மாற்றப்படாத மற்றும் தலைப்புடன் வெளியிடப்பட்டதாக இருக்க வேண்டும். *விண்ணப்பங்கள் வெளியீட்டு திகதியுடன் கூடிய பத்திரிகையின் உண்மையான துணுக்குகள் (Clippings) இருக்க வேண்டும்.*

### BA - பி.ஏ. சிறிவர்தன ஆண்டின் சிறந்த பத்தி எழுத்தாளர் (மொழிப் பிரிவுக்கு ஒரு விருது)

*பதிப்பாசிரியர் மற்றும் பல்துறை எழுத்தாளர் பி.ஏ. சிறிவர்தனவின் நினைவாக இவ் விருது வழங்கப்படுகிறது.*

துணிச்சலான, சிந்தனையைத் தூண்டும் எழுத்து மூலம் பொது விவாதத்தைத் தூண்டிய ஒரு கட்டுரையாளருக்கு வழங்கப்படுகிறது. விண்ணப்பங்கள் வழக்கமான பெயர் குறிப்புடனான பத்தியாக (உண்மையான பெயர் அல்லது புனைப்பெயரில்) மற்றும் ஒன்று அல்லது இரண்டு பத்திகளுக்கு மட்டுப்படுத்தப்பட்டதாக இருக்க வேண்டும். *விண்ணப்பத்துடன் ஒருவருட காலப்பகுதியில் வெளியிடப்பட்ட குறைந்தது 12 பத்திகளின் சான்றுகள் தேவை, அதோடு பத்திரிகையாசிரின் கடிதமும் அவசியமாகும். புனைப்பெயர் பயன்படுத்தப்பட்டால், பத்திரிகையாசிரியரின் உறுதிப்படுத்தல் அறிக்கையும் அவசியமாகும்.*

### SS. சமூகப் பிரச்சினைகளை அறிக்கையிடலுக்கான சுப்பிரமணியம் செட்டியார் விருது (தனி விருது)

*வீரகேசரியின் நிறுவனரும் தொழிலாளர் உரிமைகளின் பாதுகாவலருமான சுப்பிரமணியம் செட்டியாரின் நினைவாக இவ் விருது வழங்கப்படுகிறது.*

சமூகப் பிரச்சினைகளை நியாயத்துடனும் நேர்மையுடனும் தொடர்ச்சியாக எடுத்துரைத்து, குரலற்றவர்களுக்குக் குரல் கொடுக்கும் ஊடகவியலாளருக்கு

வழங்கப்படுகிறது. கட்டுரைகள் முக்கிய கதைகளுக்கு அப்பால் சென்று சமூக தாக்கத்தை தெளிவாக மையமாகக் கொண்டு தொடர்ச்சிகளையும் உள்ளடக்கியிருக்க வேண்டும்.

### UW - உபாலி விஜேவர்தன ஆண்டின் சிறந்த விவரண எழுத்தாளர் (ஒரு மொழிப் பிரிவுக்கு ஒரு விருது)

*உபாலி பத்திரிகை லிமிடெட்டின் நிறுவனர் உபாலி விஜேவர்தனவின் நினைவாக இவ் விருது வழங்கப்படுகிறது.*

இந்த விருது, வலுவான மொழிப் புலமை, மாறுபட்ட கதை சொல்லும் பாணிகள் மற்றும் நியாயத்தன்மை, துல்லியம் மற்றும் உயர் பத்திரிகைத் தரங்களைப் பேணுகையில் வாசகர்களை ஈடுபடுத்தும் திறன் கொண்ட ஒரு சிறப்பு எழுத்தாளரை அங்கீகரிக்கிறது. பதிவுகள் மனித நலன் அல்லது வாசகரை கவரும் எந்தவொரு தலைப்பையும் உள்ளடக்கியதாக இருக்கலாம், பிரச்சினை சார்ந்ததாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

### KR - சிறந்த செய்தி அல்லது RTI ஐப் பயன்படுத்தி எழுதப்பட்ட விவரண கட்டுரைக்கான பேராசிரியர் கைலாசபதி விருது

*தமிழ் ஊடக சுதந்திரத்திற்காகப் போராடிய மற்றும் கல்வியாளர் பேராசிரியர் கைலாசபதியின் நினைவாக இவ் விருது வழங்கப்படுகிறது.*

இந்த விருது, தகவல் அறியும் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்தி பொது நலன் சார்ந்த ஒரு பிரச்சினையை அம்பலப்படுத்தி, தீர்வு காண முயன்ற ஒரு ஊடகவியலாளர் அல்லது குழுவை அங்கீகரிக்கிறது. தகவல் அறியும் உரிமைச் சட்டம் எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்பதையும், தகவல்களைப் பெறுவதற்கான செயல்முறையையும் சமர்ப்பிப்புகள் தெளிவாக விளக்க வேண்டும்.

## டிஜிட்டல் மீடியா பிரிவுகள் (பத்திரிகைகளின் வலைத்தளங்கள்)

**சிறப்பாக வடிவமைக்கப்பட்ட வலைத்தளம்** ***(ஒரு மொழிக்கு ஒரு விருது)***

சிறந்த கட்டமைப்பு, வழிகாட்டுதல், காட்சி வடிவமைப்பு, செயல்பாடு மற்றும் ஊடாடும் தன்மை ஆகியவற்றை கொண்ட செய்தி வலைத்தளத்திற்கு இவ் விருது வழங்கப்படுகிறது.

இயல்புகள் மற்றும் தனித்தன்மைகளை விளக்கும் முக்கிய அம்சங்களைக் கொண்டு வடிவமைப்பின் பலங்களை காட்டும் 10 ஸ்லைடுகள் கொண்ட PDF தொகுப்பை இணைக்கவும்.

### சிறந்த டிஜிட்டல் வீடியோ கதைசொல்லல் (ஒவ்வொரு மொழிப் பிரிவிற்கும் ஒரு விருது)

பலமான கதைகளைச் சொல்ல டிஜிட்டல் வீடியோ அல்லது அனிமேஷனைப் பயன்படுத்திய புதுமையான கதையெல்லைக்காக இவ் விருது வழங்கப்படுகிறது.

*-/பிரிவுகள் மற்றும் அளவுகோல்கள் (திருத்தப்பட்டது, ஜூன் 13, 2026)*